

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நமது குடும்பம், நமது சபை, ஓர் பரலோகம்!

பரலோக சந்தோஷத்தை, குடும்பத்திலிருந்து பறிக்கும் வலுசர்ப்பம் (Dragon) அறிந்திடுங்கள்! யார் அவன்? "நம்முடைய சகோதரர்களை குற்றம் சுமத்தும்" நஞ்சு கொண்ட வலுசர்ப்பம்! குடும்பத்தில் 'சகோதரர்களுக்குள் குற்றம் சாட்டுதலா?' கவனித்துப் பாருங்கள். அது, "வலுசர்ப்பம்". அன்று தூதன் மீகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் 'இந்த வலுசர்ப்பத்தோடுதான் யுத்தம்' செய்தார்கள்! சகோதரர்களுக்குள் யுத்தம் மூட்டி, குடும்பத்தின் அல்லது சபையின் 'பரலோக சூழலை' அழிக்க வந்த அந்த வலுசர்ப்பம் தோற்கடிக்கப்பட்டதால் நம் வீட்டிலும், சபையிலும் (பரலேகாத்தில்) அவன் காணப்படாமல் போனான்! ஆகவே பரலோகங்களே, அதில் வாசமாயிருப்பவர்களே, நீடித்த பரலோக மகிழ்ச்சியை காத்து நடவுங்கள்! என்றே வெளி.12:7 முதல் 12 வரை வசனங்கள் நம்மை எச்சரிக்கின்றன! நம் குடும்பமும், சபையும் பரலோகமாய் வாழட்டும்!

*-tr*

ஜூன் 2019

பெட்டகம் 21

பரல்கள் 6



## ‘ஆழத்தின் அழைப்பு’ புறக்கணிக்கப்படும் காலம் இது!

விண்ணின் ஆசீர்வாதத்திற்கல்ல, மண்ணின் ஆசீர்வாதத்திற்கு வலைவீசிடவே மாந்தர்கள் இன்று, துடித்து நிற்கிறார்கள்! ‘உள்ளான மனுஷனின்’ மனக்கண்கள் திறவாமல், கிறிஸ்துவின் ஐசுவரியத்தைக் காண்பதும் கூடாதே! ஆழ்ந்த ஜீவியத்தின் ஆர்வம் இல்லாமல், “அளக்க முடியாத தெய்வ அன்பை” அள்ளி குவித்திடவும் இயலாதே!! ஆழம் அழைக்கிறது! என வேதம் அறைகூவினாலும்.... ஆழம் சென்று வலைவீசிட முடியாத ஆவிக்குரிய தூக்கத்தையும், சோம்பலையும் சத்துருவானவன், விசுவாசிகளிடம் என்றும் இல்லாத அளவிற்கு இன்று விதைத்து விட்டான்!

குருவைப்போல் ‘சீஷர்களை உருவாக்கும்’ ஊழியத்திற்கு, ஜனங்களிடம் வலைவீசும் ஊழியமும் இன்றில்லையே! ஜனங்களின் பணத்தை குறிவைத்து ‘காணிக்கை’ என்ற பெயரில் வலைவீசும் ஊழியமே, சபை தொடங்கி.... T.V ஊழியம் வரை செழித்து ‘சீரழிந்து’ வருகிறது! பணத்தோடு, தங்கள் பெயர் பிரஸ்தாப கனத்திற்கும் வலைவீசும் கொடிய காலம்! தேவ இராஜ்ஜியம், கடலில் வலைவீசும் வலைக்கு ஒப்பாய் இருக்கிறது என்ற தரம் ஒழிந்து “சுய இராஜ்ஜியம்” தேடி வலைவீசும் ஊழியர்களே ஏராளம்! (மத்தேயு.13:47). ஆகிலும், விண்ணின் ஜீவியமும், ஊழியமும் இல்லையே என ஏங்கும் “ஆவிக்குரிய ஏழ்மை” பெற்ற மீதியான தமது ஜனங்களையும் இப்பூமியில் வைத்திருக்கிறார்! இவர்களே, விண்ணின் ஜீவியமும் ஊழியமும் பெற்று ஆனந்திப்பார்கள்! இவர்களுக்கே “பரலோக இராஜ்ஜியம்” என இயேசுவும் அகமகிழ்வார்!!

*-Ed*

**‘பரலோக பொக்கிஷங்கள்’** வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP**, IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு :
பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.),
MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## சபை தூய்மைப்பட ‘உபத்திரவம்’ அவசியம்!

*எல்லா துன்பங்களின் நோக்கமும் நம்முடைய உண்மையான விசுவாசத்தை நிரூபித்து காட்டுவதற்கேயாகும்! அது ‘அக்கினியினால் பொன் சோதிக்கப்படுவதற்கு’ ஒப்பாகும். பூமியின் ஆழத்திலிருந்து, பொன் வெட்டியெடுக்கப்படும்போது, சுத்தமான தங்கமாய் இருப்பதில்லை. ‘பொன்னை’ அக்கினியில் போட்டு சுத்திகரிப்பதே ஒரேவழி. நீங்கள் தங்கத்தை சோப் வைத்து தேய்த்தோ அல்லது தண்ணீரைக் கொண்டு கழுவியோ சுத்திகரிக்க இயலாது. அது, வெளியில் உள்ள அழுக்கைதான் அகற்றும். ஆனால் பொன்னோடு கலந்து வரும் மற்ற உலோகங்களை அகற்றுவதற்கு, பொன் அக்கினியில்தான் போடப்படவேண்டும். அப்போதுதான், பொன்னிலுள்ள மற்ற உலோகங்கள் உருகி அழிக்கப்பட்டு, முடிவில் சுத்த தங்கம் கிடைக்கிறது!*

**நீங்கள் ஊடாகச் செல்லும் துன்பங்கள், அக்கினி மயமாய் இருக்கக்கூடும். உங்களின் துன்பங்களை, நீங்கள் அக்கினியில் நிற்பதைப் போலவே உணரமுடியும். அந்த துன்பங்களின் ஒரே நோக்கம் என்னவென்றால் உங்கள் ஜீவியத்திலுள்ள மாசுகள் அனைத்தையும் அகற்றுவது மாத்திரமேயாகும்!**

*உதாரணமாய், கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படும் நாடுகளில் “அவர்களின் சொத்துக்கள்” அபகரிக்கப்படுகிறது! அதன் விளைவு என்ன? இப்போது அவர்கள்* **‘பரதேசிகளின் முழு நிலைக்கு’ நெருங்கி வந்து விட்டார்கள்.** *எல்லா ஆஸ்திகளும் பறிபோன படியால், ஆஸ்திகளின் மீது கொண்ட பிடிப்பு அவர்களுக்குத் தளர்ந்து விட்டது. ஆனால், உபத்திரவம் இல்லாத இடத்தில், மிகச்சிறந்த விசுவாசிகள்கூட தங்கள் உடைமைகளில் அதிக பிடிப்பு கொண்டவர்களாய் இருந்திட முடியும். ‘உலக ஆஸ்திகளில் எங்களுக்கு பிடிப்பு இல்லை’ என நீங்களாகவே கற்பனை செய்து கொள்ளலாம். அவ்வித கற்பனை, உங்களையே ஏமாற்றிக் கொள்வதைப்போல் இருக்கும். ஆகவே, ஒரு நாளில் நம் தேசத்தில் உபத்திரவத்தை தேவன் அனுமதிக்கும்போது,*

*'ஆஸ்தியின் பிடிப்பு' என்ற அசுசியிலிருந்து நாம் சுத்திகரிக்கப் படுவோம்!*

*ரஷ்ய தேசத்தை கம்யூனிஸ்ட்டுகள் ஆளுகை செய்த போது, கிறிஸ்தவர்கள் கல்லூரி படிப்பிற்கு செல்லவோ அல்லது நல்ல வேலைகளில் அமரவோ முடியவில்லை. அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட வேலையெல்லாம் தெருக்களை கூட்டும் கீழ்தரமான தோட்டி வேலைகள்தான். அதுபோன்ற சூழ்நிலைகளில், உயர் பதவிகளின் ஸ்தானத்தில் பெற்றிடும் சகல கனத்திற்கும் 'நான் முக்கியமானவன்' என்ற அனைத்து உணர்வுகளுக்கும், நாம் எளிதில் விடுபட முடியும்! இப்போது, பொன்னிலிருக்கக்கூடிய சகல அசுசிகளும் முற்றிலும் எரிக்கப்பட்டு, நாம் மெய்யாகவே தூய்மை அடைகிறோம்!*

> எனவேதான் எங்கெல்லாம் உபத்திரவம் சம்பவித்ததோ, அங்கெல்லாம், இந்த உலகத்தில் வாழும் மற்ற கிறிஸ்தவர்களைக் காட்டிலும், அங்கே மிகச்சிறந்த கிறிஸ்தவர்கள் உருவானார்கள்! ஆகவேதான், நம் இந்திய தேசத்தில் "கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் வரக்கூடாது" என்று நான் ஜெபிப்பதில்லை! அது ஏனென்றால் "சபை தூய்மையாக்கப்படுவதற்கு" விரோதமாய் நான் ஜெபிப்பதற்கு, அது ஒப்பாகிவிடும்! ஆகவே நான் உபத்திரவத்திற்காகவும் ஜெபம் செய்வதில்லை, உபத்திரவம் வேண்டாம் என்றும் ஜெபம் செய்வதில்லை!

**இந்தியாவிலுள்ள சபைகளுக்கு,** *அந்தந்த சமயங்களில் எது சிறந்ததென கர்த்தர் அறிந்திருக்கிறார். ஆகவே, முடிவான தீர்மானத்தை, நான் அவரிடமே கொடுத்து விடுகிறேன். அவர் தேர்ந்தெடுக்கும் எந்த நிலையும், சமமான நலமேயாகும். "இதுபோன்ற மனநிலையே" நாம் தேவனுடைய மெய்யான கிருபையை பெறும் போது நமக்கு கிடைத்திடும்!*

*தொடர்ந்து பேதுரு கூறும்போது, இவை அனைத்தும் கிறிஸ்து திரும்ப வரும் போது அவருக்கு துதியும் மகிமையும் கனத்தையும் கொண்டு வந்து சேர்க்கும் எனக்கூறினார். இதுபோன்ற உபத்திரவங்களின் நடுவில், நாம் இயேசுவை காணாவிட்டாலும், அவரைத் தொடர்ந்து அன்புகூருவோம்! அவரையே நம்பி இருப்போம்! அவரில் மிகுதியாய் களிகூருவோம்! பேதுரு, இயேசுவை தன் சரீர கண்களால் பார்த்திருக்கிறார்! ஆனால் இயேசு கூறும்போது "காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்றே கூறினார் (யோவான்* ***20:29***). *நம்மில் எத்தனை பேர் இந்த வசனத்தை அப்படியே விசுவாசிக்கிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. அதாவது, நாம் இயேசுவை சரீர கண்களால் பார்க்காவிட்டாலும், சரீர*

*கண்களால் பார்த்த பேதுருவைக் காட்டிலும் அதிகமாய் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள்! இயேசு இந்த வசனத்தைக் கூறியபடியால், அதை என் முழு இருதயமாய் விசுவாசிக்கிறேன். பேதுரு தொடர்ந்து கூறுகையில், சோதனைகளில் நாம் உண்மையாயிருக்கிறபடியால், முடிவில் அதன் பலனாகிய "ஆத்தும இரட்சிப்பை நாம் அடைந்திடுவோம்" என்றார்! (1பேதுரு 1:9). அப்போஸ்தலர்கள் பேசும்போது, நரகத்திலிருந்து அடையும் இரட்சிப்பைவிட 'நம்முடைய ஆத்தும இரட்சிப்பையே' அதிக மதிப்புள்ளதாய் பேசினார்கள்!*

*நம்முடைய ஆத்துமா, ஆதாமிடமிருந்த சுய நலத்தையும், பெருமையையும் இன்னும் அநேக தீங்குகளையும் தன்னோடு பெற்றுள்ளது. இதுபோன்ற எல்லா தீமைகளிலிருந்தும் நாம் இரட்சிக்கப்பட அவசியமாயிருக்கிறதே! இன்னும், உலகப்பொருட் களின் மீதும், நம் கௌரவத்தின் மீதும் கொண்ட நேசமும், சுயத்தை-மையமாய் கொண்டு வாழும் எல்லா தீமைகளிலிருந்து நாம் இரட்சிக்கப்படவும் அவசியமாயிருக்கிறதே! அக்கினிமயமான இந்த சோதனைகள், உபத்திரவங்கள், எத்தனையோ தீமைகளிலிருந்தும் நம்மை இரட்சித்துக் கொள்ள உதவி செய்கின்றன!*

*மனநிலை பாதிக்கப்பட்ட பிள்ளைகளினிமித்தம் ஏற்படும் சோதனைகளை எண்ணிப்பாருங்கள்! அதை "துரதிருஷ்டம்" என்றே சில ஜனங்கள் எண்ணுகிறார்கள். நம்மில் ஒருவராகிலும் அப்படி ஒரு குழந்தையைப் பெறுவதற்கு ஜெபித்திடமாட்டோம். ஆனால் தேவனை நேசிக்கிற ஒரு குடும்பத்தில், அப்படி ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ள அவர் அனுமதித்திருந்தால், அந்த சோதனையை அவர்களுக்கு "நன்மையாகவே தேவன் முடித்துத் தருவார்" என்ற முடிவை நாம் நிச்சயமாய் நம்பி இருக்கலாம்!*

**மனநிலை பாதிக்கப்பட்ட பிள்ளைகளை வைத்திருக்கும் குடும்பங்களில் மென்மையான குணமும், தியாகமான ஆவியும், மற்ற பிள்ளைகளின் மத்தியில் செய்திடும் அன்பின் ஊழியமும்.... வேறு எந்த குடும்பங்களிலுள்ளவர்களைக் காட்டிலும் அதிகமாய் பெற்றிருக்கிறார்கள்!**

*அநேக சமயத்தில், நல்ல திறமையும் ஆரோக்கியமும் கொண்ட பிள்ளைகளை உடைய பெற்றோர்களின் இருதயத்தில், அவர்களையும் அறியாமலே 'பெருமை' உள்ளே பிரவேசித்து விடுகிறது. 'பெருமை' பரத்திற்கு சொந்தமானதல்ல.... அது, நரகத்திற்குரியது! ஆனால், துரதிரஷ்டவசமாக, அநேக விசுவாசிகளின் குடும்பங்களில் பெருமையே காணப்படுகிறது!*

**தன்னுடைய பிள்ளைகள் அனைவரும் சோதனைகளை சந்திப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார்.** *அவருடைய மிகுதியான ஞானத்தின்படி, எப்போது அவைகளை அனுப்ப வேண்டும் என துல்லியமாய் அறிந்திருக்கிறார். நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கும் போது, நம்முடைய ஜீவியத்தில் அவர் அனுமதித்த சோதனைகள் ஒன்றிலாவது* **"ஒரு சிறு தவறுகூட"** *தேவன் ஒருபோதும் செய்யவில்லை! என்பதைக் கண்டறிவோம்! நம் ஜீவியத்தில் அவர் அனுமதித்த ஒவ்வொரு சோதனையும், நம்மைப் பொன்னைப்போல் சுத்திகரிக்கவே அனுமதித்தார் என்பதை அந்த நாளில் நாம் கண்டறிவோம். இதை நீங்கள் விசுவாசிப்பவர்களாய் இருந்தால், நீங்கள் கர்த்தரை எப்போதும் ஸ்தோத்தரிப்பீர்கள். உங்கள் சோதனைகளின் மத்தியில் "சொல்லி முடியாத சந்தோஷத்தைப் பெற்றிருப்பீர்கள். அதுவே, உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பாய்" மாறும்!*

"இந்த இரட்சிப்பை" முற்காலத்து தீர்க்கதரிசிகள் தெரிந்து கொள்ள ஆசையாயிருந்தார்கள், ஆனால் அவர்களுக்கு அது கிட்டவில்லை. இந்த இரட்சிப்பை தூதர்களும் காண ஆசையாயிருந்தார்கள் என வாசிக்கிறோம் (1பேதுரு1:12). ஆனால் இப்போதோ, பரத்திலிருந்து வந்த பரிசுத்தாவியானவர், இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்களை அபிஷேகம் செய்திருக்கிறார்!

*ஆகவே, இத்தனை ஆச்சரியமான சுவிசேஷத்தை நாம் பெற்றிருக்கிறபடியால் 'கொஞ்சகாலம் சம்பவிக்கும் இந்த உபத்திரவங்களின் வழியாய்' நாம் கடந்து செல்லவேண்டியது அவசியமாயிருக்கிறது என்றே பேதுரு கூறினார். நாம் சந்திக்கும் எந்த உபத்திரவங்களைக் குறித்தும் சஞ்சலப்படாமல், நம்முடைய மனதை திடப்படுத்தி, கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி இருக்கக் கடவோம்! என்றே கூறினார் (1பேதுரு 1:13).*

*இதன் பின்பு, நம்முடைய பரமபிதா பரிசுத்தராயிருக்கிறதைப் போலவே நாமும் பரிசுத்தராயிருக்க வேண்டும்! என்ற அழைப்பை நினைப்பூட்டி எழுதினார் (1பேதுரு 1:15). இதற்கென்றே பொன்னைப் போல் நம்மை சுத்தம் செய்திட தேவன் விரும்புகிறார்.* **இதனிமித்தமே** *நீதிமான்களுக்கு வரும் துன்பம் அநேகமாயிருக்கிறது (சங்.34:19). இதனிமித்தமே, உலக ஜனங்களின் ஜீவிய பாதை 'இலகுவாய் இருப்பதைப்போல்' நமக்குத் தோன்றுகிறது. இயேசுவை நேசித்து, அவரைப் பின்பற்றும் உத்தம சீஷர்களும் பரதேசிகளுக்குமே இந்த சுவிசேஷம் விளங்கும்!*

*– சகரியா பூணன்*

## ‘துன்பங்களை மேன்மை பாராட்டாதிருக்க’ கற்று தந்தார்!

*பாவமா? நரகமா? என்ற கேள்விக்கு நான் பெற்ற விடை மிக எளிதானதேயாகும்: ஏனெனில் “ஓ கர்த்தாவே நான் பாவம் செய்து, உம் சமூகம் இழந்து நரகத்திற்குப் போவதைவிட* **இப்போது உம்மோடு கொண்ட ஐக்கியத்தோடு** *நான் நரகத்திற்குச் செல்லவும் ஆயத்தம்.* **உமது ஐக்கியம் இருக்கும் நரகம் எனக்கு போதும் ....** *உம்மைப் பிரிக்கும் பாவம் எனக்கு வேண்டவே வேண்டாம்” என சிறிதுகூட தயங்காமல் பதில்கூற என்னால் முடிந்தது. ஆனால் இப்போது எனக்கு கடினமாய் தோன்றியது எல்லாம், நான் செய்த நன்மைகளேயாகும். அந்த நன்மைகளைத் தேவன் கூறியே நான் செய்தேன்! இப்போது அவைகள் யாவும் ‘பொல்லாதது போல்’ எனக்கு முன் வந்து நின்றன! நான் செய்த ஜெபங்கள், தருமங்கள், உதாரத்துவங்கள் எனக்கு எதிராய் எழும்பி நின்றதைக் கண்டேன். இவ்விதமாய் என் சொந்த மனசாட்சி எழுப்பிய* **ஓர் மாறுபாடான எதிர்ப்பு** *என் உள்ளத்தில் வேதனை தந்தது! இங்குதான் ஒரு விநோதம் கண்டேன்: கிறிஸ்துவை அறிவதற்கு முன்பாக, எனக்கு மன்னிக்கப்பட்ட இளவயதின் பாவங்கள் என் உள்ளத்தில் வலியை ஏற்படுத்தவில்லை. அந்த மன்னிக்கப்பட்ட தீய பாவங்கள் எனக்கு முன்பாக நின்று என்னை ஆக்கினைப்படுத்தவும் முடியவில்லை! ஆனால், “நான் செய்த நன்மைகள்” என்னை ஆக்கினைப்படுத்தி, எனக்குள் சஞ்சலத்தை ஏற்படுத்திவிட்டது.*

*இது ஓர் உன்னத நிலை! தேவனை நெருங்கி வருபவர்களுக்கு அவர் காண்பிக்க விரும்பும் ‘ஒரு முக்கிய சத்தியம்!’ கர்த்தர் கற்பித்து எனக்குத் தரும் இந்தப் பாடங்களை, என் ஆலயத்தின் “பாவ சங்கீர்த்தன பாதிரியார்” நிச்சயமாய் புரிந்து கொள்ள மாட்டார்.*

**கர்த்தரோ பாரம்பரியங்களுக்கு அப்பாற்பட்ட உன்னதத்தை போதிக்கிறவர்! ஆம், கர்த்தரோ ‘நம் சொந்த நீதிகளை’ மறுத்து, அதை நியாயந்தீர்க்கிறார்! மனுஷீக போற்றுதலுக்குரிய யாதொன்றையும் உன்னதம் ஏற்றுக்கொள்வதில்லை!**

*‘பாவத்தைப் பாராத சுத்தக்கண்ணராகிய தேவன்’ மனுஷன் நல்லது என்று எண்ணுகின்ற நீதியையும் புறக்கணிக்கிறார். ஆகவே ‘உலகத்தின் யாதொரு திசையிலிருந்தும்’ எனக்கு வேண்டிய சகாயத்தை என்னால் எதிர்பார்த்திட முடியாது என்பதையும், என்னுடைய உதவியோ வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்ல கர்த்தாவிட மிருந்து மாத்திரமே வரவேண்டும் என்பதையும் அறிந்து கொண்டேன்! இப்போது எனக்குத் தொடர்ந்து வரவேண்டிய பாதுகாப்பெல்லாம்: “ஆவிக்குரிய பிரியத்திற்குரிய இரகசியமாகவே” இருந்தது! அந்த*

*இரகசியம் "நான் செய்த நன்மைகள்" என யாதொன்றையும், எனது இரட்சிப்பாக எண்ணி நான் சார்ந்து கொள்ளக்கூடாது! என்பதேயாகும்.*

**ஆகவே, பேராபத்து அல்லது பேரழிவு என யாதொன்று என்னை நெருங்கி னாலும் "என்னை நான் தேவனுக்குள் காண்பதே, எனக்கு உயர்ந்த பாதுகாப்பாய்" இருந்தது. எனக்குத் தேவையான அனைத்துமே இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்!**

*நான் உரத்த சத்தமாய் கூற விரும்புவது என்னவென்றால் "தன்னுடைய நீதியில் மகிழ்ந்து பொங்கி நிற்கும் மனுஷனே!* **மகத்துவமான உன் செயல்களைக்** *கொண்டு 'தேவனுக்கு மகிமை' என நீ கூறிக்கொள்கிறாய்! இப்போது நான் கற்றுக்கொண்ட சத்தியத்தின் படி, நான் மகிமை பாராட்ட விரும்புவதெல்லாம்* **என்னுடைய பெலவீனங்களேயாகும்!"** *அது ஏன் தெரியுமா? இன்று, என்னுடைய பெலவீனங்களே 'அழகும் கீர்த்தியும் நிறைந்த இரட்சகரை' எனக்குப் பரிசாய் தந்துவிட்டது!*

**எனக்குச் சம்பவித்த எல்லா துன்பங்களும், மேன்மையானது என நான் முன்பு கருதிய அனைத்தும் இப்போதோ என்னுடைய சுய கௌரவத்தை இழப்பதற்கு உதவி செய்ததாகவே கண்டேன்!**

*ஆகவே நான் படுத்த படுக்கையாய் இருந்த மாதங்களில் நான் அடைந்த 'வலிகளை' பாவமாகவே நான் கண்டு, என்னைத் தாழ்த்தினேன். இனமறியாத இந்த துன்ப நேரத்தில் நான் வாசிக்க முயற்சித்த ஆவிக்குரிய புத்தகங்கள், நான் கடந்து வரும் இந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்கு கைக்கொடுப்பதாகத் தோன்றவில்லை. அந்த ஆவிக்குரிய புத்தகங்கள், திவ்விய கிரியைகளை வெளிப்படுத்தியே காட்டின! ஆனால் இப்போது எனக்கோ, "என் துன்பங்களையே திவ்வியமாய் எண்ணிவிட்ட செயல்" பாவமாகவே என் கண்முன் தோன்றியது!*

*ஆகிலும், இந்த புத்தகத்தின் ஆரம்பத்தில் நான் சொல்லி வந்த துயரங்களைக் குறிப்பிட்டு எழுத மகிழ்ச்சியாகவே இருந்தேன்! ஏனென்றால் தங்களுக்கு ஏற்படும்* **துன்பங்களை ஆவிக்குரிய வழியில் கையாண்டு, கிறிஸ்துவுக்குள் ஐசுவரியவான்களாய் மாறும் வழியை திரளான கிறிஸ்தவர்கள் அறியவில்லை** *என்பது ஒன்றே காரணமாகும். யாதொரு ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் உதவாத உலக பிடிப்புகள், மனுஷீக சிநேகங்கள், சுய அன்புகள் போன்ற யாவும் தகர்க்கப்படுவதற்கு 'துன்பங்களை குறிப்பிடுவது' அவசியமாகவே தோன்றியது. ஆனால், தேறிவரும் என் வளர்ச்சிக்கு 'துன்பங்கள்' எக்காலத்தும் எனக்குரிய*

மேன்மையான சம்பாஷணையாய் தோன்றி அல்லது அதை மற்றவர்களுக்கு கூறிட எனக்கு 'அன்று போல்' இன்று ஆவிக்குரிய வளர்ச்சியாய் தோன்றவில்லை! தூயாதி தூயவரின் நாமம் மாத்திரமே மகிமைப்படுவதாக!

– மேடம் குயான்

---

## சோதித்துப் பாராமல் 'கேட்டதையெல்லாம் நம்பும்' சுய வஞ்சகம்!

கடைசி நாளில் "கள்ள கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கதக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" என இயேசு எச்சரித்தார் (மத்.24:24). அன்று அவர் தந்த எச்சரிப்பின் வார்த்தைகள், இன்றைய கால நமக்கும் நம் சபைகளுக்கும் நிறைவேறி வருவதைப் பாருங்கள். நீங்கள் எவ்வளவு தீவிரமாய் பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்னேறிச் செல்கிறீர்களோ, அவ்வளவுக்கு அதிகமாய் சுய - வஞ்சகத்தின் அபாயமும் பெருகி வரும் என்பதில் கவனம் கொள்ளுங்கள்!

கிறிஸ்தவ உத்தம ஜீவியத்தை 'ஏனோதானோவென்று வாழ் பவனை விட' 'உபதேசத்தில்' தேறியவனே சேதத்திற்கு உரியவனா யிருக்கிறான். ஏனோதானோவென்று, விலையேறப்பெற்ற தன் கிறிஸ்தவ - விசுவாச ஜீவியத்தை அலட்சியப்படுத்தி வாழ்ந்தவன் "வஞ்சிக்கப்பட்டவன்" எனக்கூறுவது தகும்! ஆனால், ஆவிக்குரிய வனாய் இல்லாமல், தன் மார்க்க உபதேசத்தில் முன்னேறிச் செல்பவனோ **சுய – வஞ்சகத்தின்** அபாயத்திலிருக்கிறான். இன்று அநேக ஜனங்கள் 'கேம்ஸ்' விளையாடுவதைப்போலவே, மார்க்கவாத நிலையில், தாராளமாய் விளையாடுகிறார்கள். 'மதவாதம்' எந்த விளையாட்டுகளையும் மிஞ்சி 'தெய்வ பயத்தை புறக்கணித்து' துள்ளி - ஓடும் விளையாட்டாக மாறிவிட்டது!

> **கேட்பாரற்று கிடக்கும் தோட்டம், வெகு சீக்கிரத்தில் 'காஞ்சொறி செடிகள்' மூடிய களைகளால் நிறைந்து விடும். அதுபோலவே, சத்தியத்தை தொடர்ந்து விளையச் செய்யாத இருதயத்தில் "சுய - வஞ்சகத்தின் வேர் முளைத்து" அந்த இருதயம் 'வேத உபதேசம் மாத்திரமே கொண்ட' வனாந்திரமாய் மாறிவிடும்!**

விசுவாசம் நம் ஆத்துமாவின் நன்மைகளுக்கு எவ்வளவு அவசிய மாயிருக்கிறதோ, 'கேட்டதையெல்லாம் - நம்ப மறுக்கும்' குணாதி சயமும் நமக்குத் தேவையாகவே இருக்கிறது. சில காரியங்களை கவனித்துப் பார்த்து 'அதை சந்தேகித்து நம்ப மறுப்பது' பாவம் அல்ல! **ஆனால், 'யார் சொல்வதையெல்லாம் கேட்டு' அதை அப்படியே நம்பி விடுவது**

**மரணத்தின் – நாசத்தைக் கொண்டு வந்து விடும்.** *உத்தம விசுவாசம், 'பிறரால் ஏமாற்றப்படும்' தன்மை கொண்டதல்ல! யார் எதைக் கூறினாலும் அதை எளிதாய் எடுத்து ஏமாற்றப்படுகிறவன், தேவனை எக்காலத்தும் கனம் செய்து வாழ தவறி விடுவான். இதுபோன்ற வஞ்சிக்கப்படும் மனநிலை, 'ஒரு தீக்கோழி' கொண்டிருக்கும் மனப்பான்மைக்கு ஒப்பிடலாம்.*

அந்த தீக்கோழி, தன் கண்களுக்கு எதுவெல்லாம் உணவு போல் தோன்று கிறதோ, அதை தன் அலகினால் கொய்து விழுங்கிவிடும். எது சத்தியம்? எது நேர்மை? என்பதை அறியாமல், போலியானதைப் பிரித்துப் பார்க்கும் தன்மை இல்லாத அநேக கிறிஸ்தவர்கள், ஒரு தீக்கோழியை விட மேலானவர்கள் அல்ல!

*ஆரோக்கியமான ஆத்துமாவைக் கொண்ட ஒரு கிறிஸ்தவன், ஆரோக்கியமான இரத்த ஓட்டத்தை கொண்டவனுக்கு ஒப்பாயிருக்கிறான். அவனுடைய ஆத்துமாவின் இரத்த ஓட்டத்தில் வெள்ளை அணுக்களும் சிகப்பு அணுக்களும் சரிவிகிதத்தில் இருக்கும். 'சிகப்பு அணுக்கள்' விசுவாசத்திற்கு ஒப்பாயிருக்கிறது. அவைகள், 'ஜீவன் தரும்' பிராண வாயுவை, சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் எடுத்துச் செல்லுகிறது.* **வெள்ளை அணுக்களோ 'நம்ப மறுக்கும்' தன்மைக்கு ஒப்பாயிருக்கிறது.** *இந்த வெள்ளை அணுக்கள், சுய நலத்தன்மை கொண்ட, சாவுக்கேதுவான விஷத்தன்மையோடு வரும் அணுக்கள் மீது பாய்ந்து அதைக் கொன்று சரீரத்திலிருந்து வெளியேற்றி அகற்றி விடுகிறது. இவ்வாறாக, இரண்டு விதமான அணுக்கள் 'இணைந்து செயலாற்றி' சரீரத்தின் திசுக்களை நல்ல நிலையில் வைத்துப் பாதுகாக்கின்றன! எனவே, ஒரு ஆரோக்கியமான இருதயத்தில் "வஞ்சகத் தன்மையான அனைத்தையும்" புறக்கணிக்கும் தன்மையை தேவன் தந்திருக்கிறார். ஆனால், பேதையும் எளிதில் 'யார் எதைச் சொன்னாலும் நம்புகிறவனும்' உத்தமத்திலிருந்து விலகி வஞ்சக வலையில் வீழ்வான். அவன் பெற்றிருக்கும் அந்த விசுவாசம், எதையும் 'சந்தேகித்து சோதித்துப் பார்க்கத்' துணிவதில்லை!*

*ஆகவே செய்தியின் சாரத்தைக் கேளுங்கள்! தேவனிடத்தில் விசுவாசம் கொண்டு நிலைத்திருக்கும் யாராயிருந்தாலும் அவர்களே,* **தீமையை அந்தரங்கத்தில் ஒளித்து வைத்து, வஞ்சனைக்குள் வீழ்த்த துடிக்கும் எதையும் 'நம்ப மறுப்பார்கள்!'** *இவர்கள், ஜோஷியத்தையும் மந்திர வாதத்தையும் பேய் குணத்திற்குரிய யாதொன்றையும் மனப்பூர்வமாய் மறுப்பதற்கு ஒப்பாகவே* **'கேட்கின்ற யாதொன்றையும் நம்பும்' வஞ்சகத்தையும், பேய்குணத்திற்கு ஒப்பாகவே புறக்கணிக்க வேண்டும்.** *எந்த ஒரு உத்தம கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும் 'கேட்பதையெல்லாம்*

*நம்பும்' வஞ்சக விஷத்தன்மை இருப்பதில்லை! அது ஏனென்றால், அவனிடத்தில் கிறிஸ்து வாசம் செய்கிறார், அவரே அவனுக்கு வழியும்! சத்தியமும்! ஜீவனுமாயிருக்கிறார்! அவன் தன் ஜென்ம காலத்திற்கும் வஞ்சிக்கப்படுவதில்லை!..... ஆமென்.*

*– A.W.டோசர்*

---

## 'ஆத்தும ஜெபமே' அன்பின் ஜெயத்திற்கு நடத்தும்!

*உண்மை ஜெபத்தில், ஆத்துமா விழிப்படைந்திருக்கும்! ஜெபத்தின் குரல், ஆத்துமாவின் குரல்! இவ்வாறு ஆத்துமாவில் ஜெபிக்கும் ஜெபத்திற்கே பரவசமுண்டு. ஆத்தும உற்சாகத்தில், கர்த்தரோடு இணையும் ஜெபத்திற்கு, அதிக நேரம் செலவழியும்!*

**ஆத்துமத்தில் ஜெபிக்கும் நிலையை அடையாத ஆரம்ப நாட்களில், கடிகாரம் மெதுவாய் ஓடுவதைப்போல் தோன்றும். படிப்படியாய், ஜெப தியானத்தில் பழகிய நம் ஆத்துமாவிற்கு நேரம் வேகமாய் ஓடிவிடும்! அநேகர், இந்த உயிர் நாடியான ஜெபத்திற்கு இன்னமும் வரவில்லை!**

*ஆத்தும ஜெபத்தில் விளைந்திடும் பலன்: அந்த ஆத்துமா நாளுக்கு நாள் மென்மையான சுபாவத்தில் வளர்ந்து வரும். எப்படியெனில் தங்களைப் புறங்கூறி தூற்றும் மக்களுக்காய், ஒருவரும் ஜெபிப்ப தில்லை. ஆனால், தங்களைப் புறங்கூறும் மக்களுக்காக ஜெபிப்ப வர்கள், புறங்கூறிட முடியாது! இவ்வாறு, மெய்யான ஆத்தும ஜெபம், ஒரு அழுக்கு நீக்கும் நவச்சாரத் தன்மை கொண்டதாயிருக்கிறது! ஆகிலும் நமக்குள்ளிருக்கும் அழுக்கைப் போக்கவே, இரத்த ஓட்டத்தை மிக உன்னத சுத்திகரிப்பாய் தேவன் வைத்திருக்கிறார்! அதுபோலவே ஜெப ஜீவியத்தில் நாம் பழகி வரும்போது, கேடான அழுக்குகளை "இம்மானுவேலின் இரத்தம்" பரிசுத்தாவியானவர் குறிப்பிடும் பாவங்களை 'நம் ஜெபத்தில்' வல்லமையாய் சுத்திகரிப்பு செய்கிறது!*

*நாம் வேத அறிவில் வளர்வதைக் குறித்து சாத்தான் பெரிதும் அக்கறைப்படுவதில்லை. நாமோ, வேதம் கற்றுத் தந்த* **போதனைகளைக் கைக்கொண்டு ஜெப ஜீவியத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்!** *ஆத்துமாவில் ஆழமில்லாத இருதயத்தை வைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்?*

**நீங்கள் ஜெபத்தில் தேவனோடு நின்று பழகாமல், உங்கள் புகழுக்கு விரும்பும் 'ஆவிக்குரிய பரிசுத்தவான்களோடு நீங்கள் நின்று கொண்டதால்' என்ன பிரயோஜனம்?**

*உங்கள் சரீர தூய்மையில் பெரிய அக்கறை எடுத்துக்கொண்டு,*

*உங்கள் மனதும் உங்கள் ஆவியும் கறைப்பட்டு துர்நாற்றம் கொண்டிருந்தால், அதில் யாதொரு சிறப்பும் இல்லையே! உங்கள் ஆத்துமா,* **மண்ணுக்குரிய மாம்சீகத்தைக்** *கொண்டிருந்து, வெளியே நீங்கள் காட்டும் பக்தியில் பிரயோஜனம் ஏதுமில்லை! உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் நலிந்துபோய் இருக்கும்போது, உங்கள் சரீர பெலத்தை உயர்த்திக் காட்டுவது, எப்படி சீராய் இருக்க முடியும்? உலக செல்வம் ஏராளமிருந்தும், உங்கள் ஆவிக்குரிய பெட்டகத்தில் தரித்திரம் தாண்டவமாடினால், அதில் பயன் என்ன? சமுதாய பிரபல்யத்தில் நீங்கள் ஆறுதல் பெற்றுக்கொண்டு, 'நரக வாழ்க்கையின் கொடுமை' என்ன என்பதை தெரியாதிருந்தால், அது வேதனை அல்லவோ? இதுபோன்ற, எதிரும் புதிருமான ஜீவிய குளருபடிகளை* **'ஜெபமே' சீர்ப்படுத்தி குணமாக்கி விடும்!**

*இவ்வித ஆவிக்குரிய குளருபடிகளிலிருந்து தப்பித்து வாழும் ஒரு ஆத்துமா, தேவனோடு இசைந்து நடக்கும் நேரத்தை எப்படியாகிலும் சம்பாதித்துக் கொள்ளும்! ஆவிக்குரிய செல்வத்தை நாடி, தான் ஜெபத்தில் பேசுவதை தேவனுடைய செவிகள் எப்போதும் கேட்க வேண்டும் என வாஞ்சிப்பவன் 'அதிகமான தனிமையில் வாழ்ந்து' தன் ஜீவியத்தில் 'துன்பத்தின் அப்பத்தை' அதிகமாய் புசிக்கும் நிலையிலிருப்பான்!*

> இவ்வாறு ஜெப ஜீவியத்தில் மகிழ்ந்து முன்னேறி வருபவனுக்கு, குடும்பத்தில் ஏற்படும் மிகுதியான எதிர்ப்போ அல்லது சமுதாயத்தின் மிகுதியான எதிர்ப்போ அவனுக்கு இருப்பதை அறிந்தாலும், அதை அறியாதவனைப்போலவே முன் செல்வான்!

*அவன், தன் 'ஆத்தும வருத்தத்தை' அறிந்திருப்பான்! சிறந்த நண்பர்களாயிருக்க வேண்டியவர்களின் இழப்பையும் நன்கு அறிந்திருப்பான்! ஏனெனில் 'காதலர்களின் சிநேகம்' தனிமையில்தான் உண்டு என்பது அவனுக்குத் தெரியும்! இந்த உச்சகட்டமே, ஆத்துமா கண்டடைந்து மகிழும் இலக்காகும்!*

*'என்னை பின்பற்று' என்ற குருவின் அழைப்பைக் கேட்ட ஒரு ஆத்துமா இன்ப அதிர்ச்சியில் உறைந்து விடுவான்! அவனுக்கு இந்த லோக இன்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் சுருங்கிப்போய்விடும். அவன் ஆத்துமாவோ, அவனை அழைத்தவருக்குப் பின்னால் தீவிரமாய் முன்னேறிச் செல்லும்! குருவைப் பின்தொடர்ந்து... பின் தொடர்ந்து இதுவே அவனுக்கு எல்லாமுமாய் மாறிவிடும்! இதை வாசிக்கும் சிநேகிதரே, இந்த பரம குருவின் அழைப்பின் தொனியை நீங்களும் கேட்டுவிட்டால், அதில் பரவசம் கொண்டு, அவருக்கு*

*இன்முகம் காட்டி, ஜீவ காலமெல்லாம் அவரையே பின்தொடர்ந்து செல்வதற்கு சம்மதிப்பீர்களா?*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## கிறிஸ்துவின் நற்கந்தமில்லாத பிரசங்கம் என்னத்திற்கு?

**சு**மார் ஐம்பது வருஷங்களுக்கு முன் இரட்சண்ய சேனையார், சென்னையில் உற்சாகமாக வேலை செய்தார்கள். அவர்களைச் சேர்ந்த ஒரு சகோதரன் திருநெல்வேலியிலுள்ள தன் ஊருக்கு வந்திருந்தார். சில நாட்களுக்குள்ளாக அவருடைய இரட்சிப்பும், அல்லேலூயாவும் பறந்து போய்விட்டது! அக்காலத்தில் நான் நாசரேத்தில் இருந்தேன். இவர் என்னிடம் வந்து: ஐயா, நான் சென்னையில் இரட்சண்ய சேனையிலிருந்தபோது என் சந்தோஷத்திற்கு அளவில்லை. பாடுவோம், ஜெபிப்போம், சாட்சிகூறுவோம், கொட்டு முழக்கமும் கைத்தாளங்களும் எவ்வளவோ உற்சாகமாயிருக்கும். நான் ஊருக்கு வந்து ஒரு மாதமாகிறது. என் இரட்சிப்பும் சந்தோஷமும் எங்கேயோ பறந்து போய்விட்டது என்றார். ஐயோ, பரிதாபம்! நான் அவரைப் பார்த்து: தேவ தூதன் மேய்ப்பருக்கு அறிவித்தப்படி, ஆண்டவரே போதித்தபடி, அப்போஸ்தலர் எழுதினபடி, **கிறிஸ்துவே நமது இரட்சிப்பும் சந்தோஷமுமாயிருக்கிறார்!**

> நீங்கள் கிறிஸ்துவின் அளவற்ற கிருபையையும் அன்பையும் அறிந்து, அவரை உங்கள் ஜீவனாக ஏற்றுக்கொண்டு, **அவரிலே நிலைத்திருந்து பிழைத்தால்,** சேனையார் கூட்டமோ கூட்டமில்லையோ, பாட்டுகளோ பாட்டுகள் இல்லையோ, கைத்தாளங்களோ கைத்தாளங்கள் இல்லையோ, நீங்கள் தனித்து எங்கே போனாலும், எந்தக் காட்டுக்கோ தீவுக்கோ போனாலும் உங்கள் இரட்சிப்பு அசையாது!

ஏனென்றால், ஜீவனுள்ள ஆண்டவரே உங்கள் இரட்சிப்பாயிருப்பார். அவர் ஒருபோதும் உங்களைவிட்டு விலக மாட்டார் என்று சொல்லி ஜெபித்து, கிறிஸ்துவின் கிருபைக்கு அவரை ஒப்புவித்து அனுப்பினேன். மிகுந்த சந்தோஷத்தோடே அவர் ஊருக்குத் திரும்பினார்.

பம்பாயிலிருந்த ஒரு சகோதரன், தான் ஒருநாள் பெந்தெகொஸ்தே கூட்டத்திற்குப் போனதாகவும், நடு இரவில் அவர்கள் போட்ட கூச்சலும், தரையில் விழுந்து புறண்டதும், கத்தின சொற்களும் தனக்கு அதிகக் குழப்பத்தை உண்டாக்கினதென்றும், அது பரிசுத்த ஆவியா? அசுத்த ஆவியாவென்று தனக்குத் தெரியவில்லையென்றும் என்னைக் கேட்டு எழுதினார். அவருக்கு நான் சுருக்கமாய் பதில் எழுதினேன்.

*"மரம் நல்லதோ கெட்டதோ என்பது அதன் கனிகளால் அறியப்படும்" என்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார்!*

**கிறிஸ்து அளவில்லாமல் ஆவியைப் பெற்றவராயிருந்தும், வல்லமையுள்ள ஆண்டவராயிருந்தும், எவ்வளவோ சாந்தமும், தாழ்மையும், அமைதலுமுள்ள வராய் சஞ்சரித்தார். வாக்குவாதமோ, கூக்குரலோ, விகற்பமான சத்தமோ அவரிடம் காணப்படவில்லை (மத்தேயு 12:18,19).**

*"பரிசுத்தவான்களுடைய ஜீவியம் ஆழமும் அமைதலுமானது".* வேதத்தைக் கொண்டு யார் யார் என்ன போதித்தாலும், அதை கிறிஸ்துவின் ஜீவியத்தோடும் அவர் போதனையோடும் ஒப்பிட்டுப் பாருங்கள், அப்போது சரியோ தப்பிதமோ என்பதை நீங்களே கண்டு கொள்ளுவீர்கள்" என்று எழுதினேன்.

*ஒருவன் விசுவாசியும் அவிசுவாசியுமாயிருக்க முடியாது! கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவனும் ஏற்றுக்கொள்ளாதவனுமாயிருக்க முடியாது! இரட்சிக்கப்பட்டவனும் இரட்சிக்கப்படாதவனுமா யிருக்க முடியாது! நாம் இதைத் திட்டமாய் அறிய வேண்டும். கிறிஸ்துவைப் பற்றிய காரியங்களை நாம் நம்பினதுண்டானால், அவரைவிட்டுப் பிரிய மாட்டோம். அவருக்கென்றே பிழைப்போம், உழைப்போம், மரிப்போம்! அவரே நமது வாழ்க்கையின் ஒரே நோக்கமாயிருப்பார். இதை வாசிக்கும் சகோதரரே! ஆண்டவர் பார்வையில் உங்கள் அனுபவமென்ன?* **பாவம் பெருகின உங்களிலே கிறிஸ்துவின் கிருபை ஏராளமாகப் பெருகி உங்களை ஆசீர்வதித்திருக்கிறதா?** *மற்றவர்களுக்கு உங்களை ஆசீர்வாதமாக்கியிருக்கிறதா? இல்லை யென்றால், கிறிஸ்தவர்கள் என்கிற பெயரால் நமக்குப் பிரயோஜன மென்ன? ஆராதனைகள் கூட்டங்களுக்கு வழக்கம்போல் போய் வருவதால் பிரயோஜனமென்ன? இதை யோசித்துப் பார்க்கும்படி தயவாய் கேட்டுக்கொள்ளுகிறேன். கிருபை நிறைந்த ஆண்டவர் இந்த நிமிஷத்திலும் உங்களை ஆசீர்வதிக்க ஆவலோடிருக்கிறார். நீங்கள் இணங்காமலும் உங்கள் சம்மதமில்லாமலும் உங்களை இரட்சிக்க சர்வ வல்லமையுள்ள கடவுளாலும் முடியாது! அற்பமாய் தோன்றும் மின்சாரக் கம்பி 'இணைக்கப்பட்டவுடனே' பிரமாண்டமான இயந்திரங்கள் பம்பரமாய் சுழல்வதைப் பார்க்கிறோமே.*

**நமது பலவீன இருதயம் கிறிஸ்துவின் திருப்பாதத்தைத் தொட்டவுடனே, அவரது கிருபைப் பிரவாகம் நமக்குள் பிரவேசித்து நம்மில் ஆச்சரியமான மாறுதலை உண்டாக்குகிறதே!**

*அவர் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டவுடனே பன்னிரண்டு வருஷகாலப் பெரும்பாடு அந்த ஸ்திரீயைவிட்டு நீங்கினதுபோல நமது*

*விசுவாச கரம் அவரைத் தொட்ட நிமிஷத்தில் நமது சமஸ்த பாவங்களும் மறைந்து நாம் இரட்சிக்கப்படுகிறோம். உன்னதமான தேவகுமாரன் இவ்வளவு கிருபையுடன் நம்மைத் தேடிவந்து இலவசமாய் நம்மை இரட்சிக்கச் சித்தமாயிருந்தும்,* **கிருபையின் இரட்சகரை அசட்டை செய்து பாவ வழியிலே போய் கொண்டிருக்கிற வனுடைய முடிவு** *என்னமாயிருக்கும் என்பதை நீங்களே தீர்மானியுங்கள். ஆம், "அவன் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரனாகிறான்" (எபி.10:29).*

*உப்பு சத்தமில்லாமல் ருசி கொடுக்கிறது! (மத்.5:13).*

*வெளிச்சம் சத்தமில்லாமல் பிரகாசிக்கிறது! (மத்.5:14).*

*புளித்த மா சத்தமில்லாமல் பரவுகிறது! (மத்.13:33).*

*விருட்சம் சத்தமில்லாமல் கனி கொடுக்கிறது! (யோவான் 15:5).*

*நிருபம் சத்தமில்லாமல் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது! (2கொரி.3:3).*

*நற்கந்தம் சத்தமில்லாமல் பரிமளிக்கிறது! (2கொரி.2:15).*

*'சத்தமில்லாமல்' என்ற இடம் வெறுமையில்லை.... அது ஜீவன்! பிரசங்கம் அவசியம். பிரசங்கமில்லாமல் சத்தியத்தை அறியவும் விசுவாசிக்கவும் ஏதுவில்லை. ஆகிலும், பிரசங்கத்தில் ஜீவியம் பிரதானமென்பதை அறிந்திருக்க வேண்டாமா? 'ஓசையிடும்' பிரசங்கங்களைவிட நிச்சயமான ஜீவிய அனுபவத்தோடு,* **சத்தியம் பேசும் எழுப்புதல்** *நம்மில் எழும்புவதாக! அதுவே, கிறிஸ்துவின் மணம் வீசும் நற்கந்தம்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## வேதத்தை எரித்து, நிந்தித்த இயேசுவுக்கு ஊழியனானேன்!

***எ****ன் இள வாலிபத்தில், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ புத்தகங்களைக் கிழித்து, அதை எரித்து சாம்பலாக்கினேன். அன்று, என் 'சிங்'* (Singh) *சமுதாயத்திற்கு முன்பாக ஒரு 'ஹீரோவைப்போல்' நின்றேன். என் சமுதாயத்தினர் என்னை பாராட்டினார்கள்! ஆனால், அந்த நிகழ்ச்சிதான், நான்* **இயேசுவை 'ஹீரோவாக்கிக் கொள்ளும்'** *மாபெரும் சம்பவத்திற்கு வித்திட்ட நாளாயிருந்தது. வீட்டிற்குச் சென்ற என் இருதயத்தில் குழப்பமும், புயலும் ஆட்கொண்டது. எனக்கு பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை தீக்கிறையாக்கியது தொடங்கி அடுத்த இரண்டு நாளும் நிம்மதி இழந்து தவித்தேன். இந்த மன உளைச்சலை தாங்க முடியாத நான் காலை* ***3*** *மணிக்கே எழுந்து இறை*

வேண்டுதல் ஏறெடுத்தேன்: “தெய்வம் ஒருவர் உண்டெனில், அவர் எனக்குத் தன்னை வெளிப்படுத்தட்டும். இன்று காலை புலர்வதற்குள் எனக்கு பதில் ஏதும் வராவிட்டால், என் தலையை ரயில் தண்டவாளத்தில் வைத்து, இந்த ஜீவனை இழந்து, அதற்கு பிறகாவது என் கேள்விக்கு பதில் கிடைக்கட்டும்! என முடிவு செய்தேன்”.

நான் தொடர்ந்து இறை விண்ணப்பம் செய்து செய்து, என் வாழ்க்கையை முடித்துக்கொள்ள தீர்மானிக்கும் கடைசி நேரமும் வந்துவிட்டது. அதிகாலை சுமார் 4½ மணிக்கு ஒரு வினோதம் கண்டேன். **நான் இருந்த அறை பிரகாசித்தது.** அறை தீப்பிடித்து விட்டதோ? என்றே எண்ணினேன். ஆனால் கதவையும் ஜன்னலையும் திறந்து பார்த்து இந்த பிரகாச ஒளிக்கு வேறு காரணம் இல்லா திருந்ததைக் கண்டேன். அந்த அறையின் நடுவில் நின்று “இந்த பிரகாசம் இறைவனிடமிருந்து எனக்கு கிடைத்த பதிலோ?” என திகைத்தேன். அறையில், இந்த வினோதமான வெளிச்சதைப் பார்த்துக் கொண்டே, இறைவனிடம் வேண்டுதல் செய்தேன். இப்போது, அந்த ஒளியில் ஒரு ரூபம் தோன்றியதைக் கண்டேன். அந்த ரூபம், நான் வணங்கி ஆராதித்த புராணங்களின் ரூபமாய் தோன்றவில்லை. சிறிது நேரம் கழித்து உருது மொழியில் என்னோடு பேசிய சத்தம் கேட்டேன்: “சுந்தர் நீ எத்தனை காலம் என்னை பரிகாசம் செய்வாய். சத்தியத்தின் வழி தேடி வேண்டுதல் செய்த உன்னிடம், உன்னை இரட்சித்து காப்பதற்கு உன்னிடம் வந்தேன். ஆனால் நீயோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை” எனக்கூறிய அடுத்த வினாடியில், அவருடைய கைகளிலும் அவருடைய கால்களிலும் இரத்தம் தோய்ந்த வடுக்கள் தோன்றியதைக் கண்டேன். உடனடியாக என் உள்ளம் தெளிவுப்பெற்று “இது இயேசு அன்றோ, கிறிஸ்தவத்தின் குரு அல்லவோ!” என தெளிவு பெற்றேன்.

பேராச்சரியத்தோடு அவர் பாதத்தில் வீழ்ந்தேன். இறைவனுக்கு நான் தந்த அவமானத்தையும், அவபக்தியையும் நினைத்து நான் கண்ணீர் சிந்திய அதே நேரத்தில், ஒரு ஆச்சரியமான சமாதானம் என் உள்ளத்தை நிறைத்து விட்டது!

இப்படி ஒரு நிரந்தர சந்தோஷத்தையே நான் தேடிக் கொண்டிருந்தேன்! இதுவே மோட்சம் என உள்ளம் பரவசமடைந்த நேரத்தில், அந்த தெய்வீக தரிசனம் மறைந்து விட்டது! ஆனால், நான் பெற்ற சமாதானமும் மகிழ்ச்சியும் என்னோடு தங்கிவிட்டது!!

நான் விரைந்தோடி, நான் அனுபவித்ததைக் கூறுவதற்கு என் தந்தையை எழுப்பி, இன்று முதல் நான் இயேசுவைப் பின்பற்றும் தொண்டனாகி விட்டேன் என கூறினேன். கண் விழித்து பார்த்த என்

*தந்தை "ஏன் அலட்டுகிறாய்? படுக்கைக்கு சென்று தூங்கு" எனக்கூறி, மேலும் "முந்தின நாள்தானே நீ கிறிஸ்தவர்களின் பரிசுத்த ஆகமங்களை எரித்தாய்! இப்போது என்னவென்றால், நான் அவர்களில் ஒருவன் என பிதற்றுகிறாய்! போய்தூங்கு என் மகனே, நீ குழப்பத்தில் களைத்திருக் கிறாய். காலை எழுந்தவுடன் சரியாகிவிடும்" எனக் கூறி அப்பா* **'சர்தார் சேர்சிங்'** *படுத்துக்கொண்டார்!*

**சுந்தரோ, தான் நிந்தனைக்கு உட்படுத்திய இயேசு தெய்வத்தை குருவாய் ஏற்றுக்கொண்டு அவருக்கு தொண்டு செய்ய முழுதும் தன்னை அர்ப்பணித்தால் மாத்திரமே குருவை ஈனப்படுத்திய தனக்கு பரிகாரம் கிட்டும் என உறுதிபட அறிந்தார். மேலும், சீக்கிய சமுதாயத்திறகு முன்பாக பகிரங்கமாய் நிந்தனை செய்த இயேசுவை, பகிரங்கமாய் "நான் அவரைப் பின்பற்றும் சீஷன்!" என அறிவிப்பதே சால சிறந்ததென தீர்மானித்தார்.**

*அவ்வாறு அறிக்கை செய்ததைத் தொடர்ந்து மாபெரும் குழப்பம் எழும்பும் என்று சுந்தர் சிங் யோசித்துக்கூட பார்க்க முடியவில்லை. தங்கள் சமுதாயத்திற்கு தலைவனாக வர வேண்டிய வாலிபன் தங்களை விட்டு பிரிக்கப்பட்டான்! என அறிந்த சமுதாய மக்கள், சுந்தரை கேவலமாய் திட்டி, அவன் படித்த பள்ளியின் ஆசிரியர்களை குற்றம் சாட்டி "ஒரு இளம் படிக்கும் மாணவனை இந்த கிறிஸ்தவ பள்ளி ஆசிரியர்கள் கட்டாயப்படுத்தி மனம் மாற செய்து விட்டார்கள்" என பொய்யுரைத்து ஆத்திரமடைந்தார்கள். சுந்தரோ, தன் சமுதாய மக்களிடம் "நான் பெற்ற அனுபவத்திற்கும் கிறிஸ்தவ பள்ளி ஆசிரியர்களுக்கும் சம்மந்தம் ஏதுமில்லை" என பலமுறை கூறியும் சீக்கிய சமுதாயத்தினார் ஆத்திரம் அடங்கவில்லை! அதன் விளைவாய் பள்ளி மூடப்பட்டது. பள்ளி ஆசிரியர்களும், மிஷனெரிகளும் தங்கள் ஜீவன் தப்ப லூதியானாவிற்கு சென்று விட்டார்கள்.*

*அப்பா* **'சர்தார் சேர்சிங்'** *சுந்தரிடம் மன்றாடி "சுந்தர் நான் ஒரு ஐஸ்வர்யவான்! நீ என் கண்ணின் ஒளியாய் இருப்பவன்! 'கிறிஸ்தவம்' நல்ல மதம் என எனக்குத் தெரியும்! நீயோ பிறந்ததிலிருந்து 'தலை சவரம்' செய்யாத சீக்கியன்! சிங் என்பதற்கு பொருள் சிங்கம்! உன் முடிவை மாற்று! இல்லையேல், நான் உன்னை புறக்கணிப்பதைவிட வேறு வழியில்லை" என கண்ணீரோடு கூறினார்!*

*சுந்தரோ, தன் அறைக்குச் சென்று ஜெபித்து, திடமான தீர்மானத் தோடு தன் தலைமுடி கூந்தலை வெட்டி எடுத்தார்! முகம் சிவந்துபோன சேர்சிங், தன் மகனை வீட்டை விட்டு அந்த இரவில் விரட்டி தள்ளி விட்டார்! செல்வந்தமாய் வாழ்ந்த சுந்தர், தன் ஊழியத்தின் முதல் நாளை மரத்தடியின் குளிரில் படுத்திருந்து துவக்கினார்!*

*– சாது சுந்தர்சிங்*

## கர்த்தருடைய ஊழியம் 'சந்தோஷமில்லாமல்' செய்வது நியாயமா?

*கர்த்தருடைய அழைப்பைப் பெற்று, இடைவிடாது ஊழியத்தில் நான் பங்கு பெற்ற பாக்கியத்திற்காக, என் உள்ளத்தில் எப்போதுமே சந்தோஷம் நிறைந்திருப்பதுண்டு! இந்நிலையில் டோனாவூர் ஆசிரமத்திலுள்ள சகோதரிகளில் சிலரோ ஆசிரமத்து ஊழியத்தில் பிரித்து கொடுக்கப்பட்ட பணியை 'ஏனோ தானோவென்று' சந்தோஷமாய் செய்யாமலிருந்ததைக் கண்டு மனம் வருந்தினேன்.*

**இந்த உலகத்தின் பணியில் 'கொடுக்கப்பட்ட வேலையை' மனநிறைவோடு செய்வார்கள் என சொல்ல முடிவதில்லை. ஆனால், கர்த்தருடைய பணிக்கென 'கொடுக்கப்பட்ட ஊழியத்தை' ஒருவன் சந்தோஷமில்லாமல் செய்தால், அதை கர்த்தர் காணாதிருப்பாரோ?**

*கர்த்தருடைய ஊழியமோ, பரந்து விரிந்த, அநேக ஆத்துமாக்களை ஆசீர்வதிக்கும் ஊழியமல்லவா? அதில் ஏற்படும் பலனோ, நித்திய மானதாகும்.* **இதை அறியாத ஒருவன் கையில் 'கர்த்தரின் ஊழியம் கொடுக்கப்பட்டால்' அவன் தன்னுடைய சுய சந்தோஷத்தையே அதிகமாய் தேடி, கர்த்தருடைய ஊழியத்தையோ அசட்டை செய்து அவமதிப்பான்!** *இப்படி ஏன் செய்கிறான்? என்பதற்கு ஒரே விடை, 'என்றும் மாறாத கல்வாரி தெய்வ அன்பை' அந்த கிறிஸ்தவ விசுவாசி அறியவில்லை என்பதே விடையாகும்.*

*கர்த்தருடைய ஊழியத்தை பூரணமாய் நிறைவேற்றிட விரும்பும் யாதொருவனுக்கும் "கர்த்தர் தன்னுடைய மிகுந்த இரக்கத்தையும்" சேர்த்தே தருகிறார்.* **ஏனெனில், கர்த்தருக்குச் செய்திடும் செம்மையான ஊழியம் 'ஒரு போர்க்களத்தை விட' அதிக வெம்மை கொண்டதாகும்!** *ஊழிய போர்களத்தின் உச்சகட்டத்தில் 'மனச்சோர்வு' அடிக்கடி வந்து தாக்குவது உண்மைதான். ஆனால் கர்த்தரோ, தமது உத்தம ஊழியனுக்கு 'மிகுந்த இரக்கத்தையும்' சேர்த்து அளித்திருக்கிறாரே! எனவே ஊழியத்தில், என்னை வந்து தாக்கும் மனச்சோர்வுகளுக்கு நான் தொய்ந்து போகும் நிலைக்கு தள்ளப்படுவது எவ்விதத்திலும் நியாயமில்லை! இவ்வாறெல்லாம், தேவன் எனக்கு தமது மிகுந்த இரக்கத்தை காண்பித்த பிறகும், மனச்சோர்வுக்கு நான் இடம் கொடுப்பது கூட, கல்வாரி அன்பை நான் அறியவில்லை என்றே கூற வேண்டும்! ஆகவே, ஊழியனாகிய எனக்கு அவர் அளித்த 'மென்மை யான இரக்கத்தை' நான் அறிய வேண்டிய விதமாய் அறியவில்லை என்பதை உணர்ந்து,* **மனதில் திடன் பெற்று,** *மறுரூபம் பெற்றேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

# ஆன் அஸ்க்யு,

## 25–ம் வயதில் விசுவாசத்திற்காக தீக்கிரையானார்!

(AD 1521–1546)



தன் இளம் வயதில், ஆண்டவரையும் வேதாகமத்தையும் அறிந்து கொண்ட சகோதரி! அவரது ஜீவன் 25-வது வயதில் எடுக்கப்பட்டாலும், தன் கணவரோடு இரண்டு பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்தார். கர்த்தரை சார்ந்து வாழ்ந்த ஆன் சகோதரிக்கு வீட்டில் ஏராளமான பிரச்சனைகள் இருந்தன. வேதாகமத்தை ஆர்வமாய் கற்று சத்தியங்களை அநேகருக்கு ஆர்வமுடன் எடுத்துக் கூறுவார்.

கத்தோலிக்க சபையில் இருந்து கொண்டே 'வேதத்தின் மீது அளவு கடந்து பிரியம் வைத்திருந்த' ஆன் சகோதரியை இலண்டனிலிருந்த ரோம சபை அவரை வெறுத்தது. அவரிடம், ஆர்ச் பிஷப் விசுவாச அறிக்கை கேட்டபோது 'ஆன் ஆகிய நான் கத்தோலிக்க வேதமும், கத்தோலிக்க சபையும் கொண்டிருக்கிற விசுவாசத்தை ஏற்று நம்புகிறேன்' என அறிக்கை செய்தார்கள். ஆகவே ஆன் சகோதரியை கைது செய்து சிறையில் அடைத்திட வகை தேடிய ஆர்ச் பிஷப் பின்வாங்கி விட்டார்.

அதற்குப் பின்பு அவரை எப்படியும் சிறையில் அடைக்க வேண்டும் என விரும்பிய 'கத்தோலிக்க தீவிரம் கொண்டவர்கள்' சில காரணங்களை முரண்பாடாக காண்பித்து, அதற்கு இணங்கும்படி ஆன் வற்புறுத்தப்பட்டார். அதற்கு பதில் கூறிய ஆன் என் நெஞ்சில் விசுவாசம் வைத்திருக்க, என் நாவின் அறிக்கைக்காக நீங்கள் காத்திருப்பது ஏன்? அது எக்காலத்தும் மாறாதது! என கூறிவிட்டார். ரோம சான்சிலரும், கத்தோலிக்க பிஷப்புமாயிருந்தவர் 2 மணி நேரம் ஆனோடு வாதம் செய்து உயிர் தப்பித்து கொள்ளும்படி கூறினார். அதற்கு ஆன் சகோதரி "என் விசுவாசத்தை மறுதலிப்பதை விட நான் சாவது மேல்!" என மிகுந்த தைரியத்தோடு கூறினார்கள்.

பின்பு அவர் கொடுமைப்படுத்தப்பட்டு அவரது இரண்டு கால்களையும் இரண்டு கைகளையும் கொடூரமாய் இழுத்து 'எலும்பு மூட்டுகளை' பிரித்து விட்டார்கள். அதன்பின்பு ஆன் சகோதரி நடக்க முடியவில்லை.

அவரை தீக்கறையாக்கும்படி மன்னர் கட்டளையிட்டபோது, ஒரு நாற்காலியில் வைத்து தூக்கி வந்தார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அந்த சோக நிகழ்ச்சியை காணும்படி கூடி வந்தார்கள். "கடைசி சந்தர்ப்பமாக, இப்போதாவது உன் விசுவாசத்தை மறுதலித்துவிட்டால் உன்னை மன்னித்து விடுதலை செய்ய அரசர் ஆர்வமாய் உள்ளார்" எனக் கூற, ஆன் சகோதரி "நான் என் ஆண்டவரை, என் எஜமானனை மறுதலிப்பதற்காகவா நான் இங்கே வந்தேன்?" என தைரியமாய் முழங்கிய அதே நேரத்தில், அவர் உடம்பில் கந்தகத்தூள் தூவப்பட, தன் விசுவாசத்திற்கு, அவர் அமர்ந்திருந்த நாற்காலியோடு தன்னை தீக்கு ஒப்புக்கொடுத்து, வீரமரணமடைந்தார்!

*– கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'தறிகெட்டு' இச்சையடக்கம் இல்லாத வாழ்க்கை தகுமோ?

குதிரையின் கடிவாளத்தை இணைக்கும் இரண்டு கடிவாள வார்களும் சமநிலையில் இருக்க வேண்டும். இந்த இருவார்களின் உதவியால்தான் குதிரையை நீங்கள் விரும்புகிற இடத்திற்கு ஓட்டிக்கொண்டு செல்ல முடியும். கடிவாளத்தின் ஒரு வார் நீளமாகத் தளர்ந்த நிலையிலும், மற்றொன்று மிகவும் இறுக்கமாகப் பிடிப்பான விதத்திலும் இருந்தால் குதிரை திசை திரும்பிச் சென்றுவிடும். இந்தத் தளர்த்திய நீள வார் என்ன? அளவுக்கு மீறி புசிப்பது, மிகுதியாகப் பேசுவது, உடலின் தேவைக்கும் அதிகமாகத் தூங்குவது, ஓட்டல் உணவு விரும்புவது, அனாவசியமாக நின்று அல்லது உட்கார்ந்து விலையேறப்பெற்ற நேரத்தை போக்கடிப்பது, பக்தி விருத்திக்கு பயனற்ற வீண் கதை பேசுவது மற்றும் நியாயமான தேவையில்லாமல், அதிகமாகச் சரீரத்தின் ஆசை விருப்பங்களை, தான் இச்சிக்கும், காம விருப்பங்களுக்கு நிறைவேற்றிக் கெடுப்பது.... போன்றவையாகும்.

கடிவாளத்தின் இறுக்கமான பிடிப்பாயிருந்த வார் எது? தன் சொந்த சரீரத்திற்கு நியாயமாகத் தேவைப்படுபவைகளைக் கொடுத்து, அதை போஷித்துப் பராமரிக்காமல் காலம் தவறி புசிப்பது, சரீர சுத்தத்திற்குரிய கடமையை இழப்பது, போன்ற வதைக்கும் செயலாகும்! கடிவாளத்தின் இரும்பை இணைக்கும் இருவார்களும் எப்பொழுதும் சமநிலைப் பிரமாணத்தில் இருக்க வேண்டும்!

ஓ, இளைஞனே! தாறுமாறாய் தறிகெட்டு ஓடும் உன் ஜீவியத்தை உன் ஆண்டவருக்கு கொடுத்துவிட்டால் 'அன்று ஒரு கழுதைக் குட்டியில் அமர்ந்து' வந்ததுபோல், உன் வாழ்வை பரம எருசலேமிற்கு நடத்திச் செல்வாரல்லவோ? உன் சரீரத்தை ஒடுக்கி நித்திய வாழ்க்கை வாழ்ந்திட, இன்றே உன்னை அவருக்கு ஒப்புவித்திடு! அந்த ஆண்டவர் 'ராஜ கனத்தோடு' உன்னை செம்மையான, பரிசுத்த பாதையில் நடத்திடுவார்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.